# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2013

PW–1 சுரேஷ்குமார் நாள்.13.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் அங்கமுத்துக்கு 2மகள்கள் இருக்கும் விவரம் எனக்கு தெரியும். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்அப்பா பெயர் கணபதியார் பிள்ளை. பிராதில் நாச்சார்அம்மாள் மகன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்அப்பாவும், அம்மாவும் ஒன்றாக சேர்ந்து தான் வாழ்ந்தார்கள். பெரம்பலூரில் நானும், 14ம் வாதியும் இருக்கிறோம். மற்ற வாதிகள் வெளியூரில் இருக்கிறார்கள். அங்கமுத்து மகள்கள் அ.வ.எண்.30/2024 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் நான் தரப்பினர் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சக்குபாய் என் சின்னம்மாள் ஆவார். நாச்சார்அம்மாள் உயிரோடு இருக்கும்வரை 4ம் பிரதிவாதியுடன் நல்ல உறவுமுறையில் இருந்தார் என்றால் சரிதான். 2, 3பிரதிவாதிகள் வீட்டிற்கு நல்லது கெட்டதுக்கு நான் போவேனா என்றால் போகமாட்டேன். என்அம்மா இருந்தவரை அவர் போய்வந்தாரா என்றால் இல்லை. என்அம்மா 4ம்பிரதிவாதி வீட்டிற்கு போனேதே கிடையாது. என்அம்மாவிற்கும், 4ம் பிரதிவாதிக்கும் எவ்வளவு நாளாக பிரச்சனை என்றால் என்பாட்டி காட்டை எழுதிகொடுத்தது முதல் 1998ம் ஆண்டு முதல் பிரச்சனையாகும். தானமாக சுப்ரமணித்துக்கும், அங்கமுத்துபிள்ளைக்கும் எழுதிகொடுத்தார்கள். அந்த விவரம் என்அம்மாவுக்கு தெரியும் என்றால் கொஞ்சநாள் கழித்து தெரியும். என்அம்மா ஏன் எழுதி கொடுத்தீர்கள் என்று அவரிடம் கேட்கவில்லை. தானபத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்பாட்டி பாக்கியத்தம்மாள் தாவா சொத்தை பிரதிவாதிகளுக்கு விடுதலை பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. தானமாக எழுதி கொடுத்தார். அந்த விவரம் எனக்கு அப்பவே தெரியும் என்றால் கொஞ்சநாள் கழித்து தெரியும்.

என்பாட்டியின் அம்மா மாரியம்மாள் தாவாசொத்தை காலி இடமாக கிரயம் பெற்றார். அதில் எப்போது வீடு கட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு விவரம் தெரிய வீடு உள்ளது. எனக்கு 40 வயதாகிறது. எனக்கு எந்த வயதில் விவரம் தெரியும் என்றால் 20வயதில் விவரம் தெரியும். என்னுடைய 20வயதிற்கு முன்பு தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு நான் போய் உள்ளேன். அப்போது என்அம்மாவும் வருவார். அந்த வீட்டில் மயில்பிள்ளை, சுப்ரமணிபிள்ளை, பாக்கியத்தம்மாள் குடியிருந்தார்கள். என்அம்மா அதில் குடியிருந்தார்களா என்றால் மயில்பிள்ளையிடம் விட்டு சென்றார். மயில்பிள்ளையிடம் அனுபவிக்க சொல்லி விட்டுசென்றாரா என்றால் அவர் Controlல் விட்டு சென்றார். 1, 2 வாதிகள் அந்த வீட்டிற்கு வந்தது கிடையாது என்றால், அவ்வப்போது வருவார்கள், போவார்கள். கடைசியாக எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த வீட்டு கிரகபிரேவேசத்திற்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான், என்அம்மா, அப்பா ஆகியோர் கிரகபிரவேஷத்திற்கு போகவில்லை. என்அம்மாவுடன் பிறந்த ராசாப்பா, சுப்ரமணியன் ஆகியோரிடம் சுமுக உறவு உண்டு. மாரியம்மாள் வாங்கிய சொத்தில் நீள, அகலம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2ல் நீள அகலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நான் சரியாக பார்க்கவில்லை. தற்போது நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் நீள அகலம் தெரியாது. 3 தாக்காக கூறியுள்ளேன். நான் கூறியுள்ள அளவுகள் சரியான அளவுகள் ஆகும். வழக்கு தாக்கல்செய்வதற்கு முன்பு சொத்தை அளந்து பார்க்கவில்லை. தாலுக்கா அலுவலக ஆவணங்களின் படி அளவுகளை குறிப்பிட்டுள்ளேன். தாலுக்கா அலுவலக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பணம் வாங்கி கொண்டு தாவாசொத்தை பொறுத்து நாச்சார்அம்மாள் விடுதலை பத்திரத்தை அவர் சகோதரர்களுக்கு எழுதிகொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என்அம்மா இருந்தவரையில் அந்த வீட்டிற்கு போய்வந்தார் என்றால் சரியல்ல.

என்அம்மா மற்றும் என்அம்மாவின் உறவினர்கள் அந்த வீட்டின் கிரகபிரவேசத்திற்கு கலந்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு நானும், என்அண்ணணும் சென்று மயில்பிள்ளை மற்றும் சுப்ரமணிக்கு நிலத்தை அளந்துகொடுத்தோம் என்றால் சரியல்ல. அந்த அடிப்படையில் தான் வீட்டின் நீள அகலத்தை சரியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அளவுகள் தெரியாது என்றால் மாரியம்மாள் கிரயம் பெற்ற அளவுகளை தான் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. மாரியம்மாள் கிரயம் பெற்ற அளவிற்கும் தற்போது நான் பிராதில் கூறியுள்ள அளவிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் சென்று அளந்ததால் தான் அந்த வேறுபாடு தெரிந்து சரியான அளவுகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை மற்றும் வயல்களை பாக்கியத்தாம்மாள் தன்னுடைய சகோதர்களுக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துவிட்டதால் பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.